# நெருக்கமான தொடர்புள்ளவர் என வேலையில் கருதப்படுபவர் யார்?

இந்த வைரஸின் மாறுபட்ட வகைகள் அச்சுறுத்தும் விதத்தில் மிகவும் எளிதாகப் பரவக்கூடும். நெருக்கமான தொடர்பில் இருந்ததுடன் சுய-தனிமைப்படுத்த வேண்டிய நிலையில் உள்ளவர்களைத், தொடர்பு கொள்ளும் அளவுகள், முகக்கவசங்களின் பயன்பாடு, கண்களின் பாதுகாப்பு மற்றும் காற்றோட்ட வசதி உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்துவதற்குக் குறைந்தளவு வரையறை தான் உள்ளது என்பதே இதன் பொருளாகும்.

## நெருக்கமான தொடர்பில் உள்ளவர்

நீங்கள் இருவரும் முகக்கவசம் அணிந்திருந்தாலும் கூட 15 நிமிடங்களுக்கும் கூடுதலாக 6 அடி அல்லது 2 மீற்றர் தூரத்திற்குள் உங்களுடன் இருந்த ஒருவர்.



மூடப்பட்ட ஓரிடத்தில், நீங்கள் சமூகமளித்த ஒரே கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர்.



மதிய உணவு இடைவேளைகளில் உங்களுடன் இணைந்து கொண்ட அல்லது நன்கு சேர்ந்து பழகிய ஒருவர்.





உங்களுக்கு அருகிலிருந்து பணியாற்றும் ஒருவர்.

## நெருக்கமான தொடர்பில் இல்லாதவர்



உங்களுடன் 6 அடி அல்லது 2 மீற்றர் தூர இடைவெளியைப் பராமரித்த ஒருவர்.





உங்களுடன் ஒரே கூட்டத்தில் கலந்து கொண்டாலும், முகக்கவசங்களை அணிந்துகொண்டு கண்களுக்கும் பாதுகாப்பு அளித்துத் தனிநபர் இடைவெளி தூரத்தையும் கடைப்பிடித்த ஒருவர்.



அருகிலேயே பணிபுரிந்திருந்தாலும், நல்ல காற்றோட்டம் உள்ள ஒரு பகுதியில் ஒரு பிளெக்ஸிகிளாஸ் (plexiglass) தடையால் பிரிக்கப்பட்ட நிலையில் பணியாற்றிய. ஒருவர்.



உங்களைப் போலவே அதே வேலை நேரத்தில், ஆனால் வேறு பகுதியில் பணியாற்றும் ஒருவர்.



Tamil

TORONTO.CA/COVID19

TORONTO Public Health